
உ

கடவுள் துணை

# மாட்டு வைத்தியம்

நோயின் குணமும்

நிவர்த்தியும் அடங்கியுள்ளன



OFFICE OF THE REGISTRAR OF ...
1 AUG 951
MADRAS

சென்னை, டி. சாரதா புத்தகசாலை

த. துரைசாமிமுதலியார் அவர்களிடம்

சர்வ சுதந்தரமும் பெற்று,

அமரம்பேடு குழந்தைவேல்முதலியார்

தெய்வமகள் விலாசம் பிரஸில்

பதிப்பித்தது.


காபிரைட்] 1951 [விலை அணா 4

...வராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

K2311:4:6
N51
151-193

உ

கடவுள் துணை



மானிலம் புகழும்

# மாட்டு வைத்தியம்

## காப்பு விருத்தம்

மனிதருக்கு நோய்வந்தால் சொல்லுவார்கள்
மந்திரமும் வாகடமும் வந்துபேசும்
இனிதான பால்கொடுக்கும் பசுக்களுக்கும்
எருதுக்கும் நோய்வந்தால் சொல்லாதப்பா
அனியாய மாய்மடிந்து போகுதென்று
அப்பனே சிறுமணவூர் முனிசாமிதான்
கனிந்தபழம் போலுரைத்த முறைசெய்வோர்க்கு
கணபதியு முன்னிருந்து காப்பார்தானே.

## மாட்டு வைத்தியம்

### மாட்டுக்கு நோயண்டாம லிருப்பதற்கு செய்யவேண்டிய சாந்தி

செவ்வாய்க் கிழமையில் சிவனார்க்கிழங்கு கொண்டுவந்து மாட்டு கொட்டாயின் கட்டுத்தறியண்டையில் பொங்கலிட்டுப் பொங்கின சாதமும் கிழங்கும் கட்டுத்தறியிலும், வாசற்படியிலும் புதைத்து வைக்கவேண்டும். மாட்டிற்கு எப்படிப்பட்ட நோயும் வரவொட்டாமற் காக்கும்.

### கோமாரி நோய்க்குச் சாந்தி

திங்கட்கிழமையில் கொடுவேலியிலையைப் பறித்துக் கொண்டு வந்து, செவ்வாய்க்கிழமை உதயத்திற்குமுன் வாசலில் பொங்க லிட்டு பகவானுக்குப் படைத்து, வாசலிலும் கொட்டாயிலும் புதைக்க சாந்தியாகும்.

### புல் தின்னுமல் திகைத்து நிற்குமாகில் வெக்கையென்று பெயர்

பக்குவம்:—கற்பூரவல்லி யிலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து உள்ளுக்குக் கொடுத்து விலாவில் சூட சொஸ்தமாகும்.

### நான்கு கால்களும் வீங்குமாகில் ஆணைவாதம் என்றுபெயர்

பக்குவம்:—எந்த உபமான ஊராகிலும் பட்டு என்கிற ஊரி லிருக்கும் சதுரக்கள்ளியில் ஒரு கிளை வெட்டிக்கொண்டுவந்து கறணைகறணையா யறிந்து ஒரு மண்பாண்டத்திற்போட்டு பதக்கு தண்ணீர் வார்த்து, குறுணிதண்ணீராகக் காய்ச்சி இறக்கிவைத்து, ஒரு பெரிய சட்டியினுல் மூடி, குப்பை யிருக்குமிடந்தேடி பள்ளந் தோண்டி, அப் பள்ளத்துக்குள் இரண்டு நாளைக்கு புதைத்து வைத்து மூன்றும்நாள் எடுத்து கையினுல் தண்ணீரைத் துழாவி மூன்றுநாள் உள்ளுக்குக் கொடுக்க சொஸ்தமாகும்.

### குறட்டைவிடும் மாட்டுக்கு பக்குவம்

மாட்டை பதனமாய்த் தரையிற்றள்ளி எருமுட்டை நெருப் புக் கும்பியில் எருக்கங்கழி யொன்றை நுழையவைத்து எடுத்துச் சுடசுட இரண்டுமூக்கிலு முருவவிட்டுத் திரும்பி பின்பு பசும் பாலும் இலுப்பைப்புண்ணுக்கும் கலந்து கரைத்து சுடவைத்து விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமையில் வார்க்கவும். இந்தப்படி 2-அல் லது 3-வாரம் வார்த்துவர குணமாகும். குறட்டை இருந்தவிடம் சொல்லாமல் ஓடிப்போகும். கைகண்டமுறை.

மாடு பலயீனத்தால் மெத்த இளைத்திருந்தாலும் அல்லது
எவ்வளவு புஷ்டியாய் தீனிபிடித்துத் தின்றும்
நாளுக்குநாள் பார்வையில்லாமலிருந்தாலும் புஷ்டியாகும்படியான

### தாசாமருந்து அல்லது ரிவாலா

மணக்கத்தையரிசிமாவு உளுந்துமாவு வகைக்கு படி-2, பனங் கருப்புட்டி-10, வெங்காயம் பலம்-12, முதலில் வெங்காயத்தை

தோலுரித்துப்போட்டு பொடியாயரிந்து மேற்படி தினுசுகளில் கலந்து 10-தேங்காய் நெற்றின்பால் பிழிந்து பிசைந்து தேங்காய்ப் பிரமாணம் உருட்டி கொடுத்துவர புஷ்டியாகும்.

### வேறு முறை

ஆதிவாரந்தோரும் ஆழ்ந்தநீரில் நீச்சலடித்து சாணத்தைக் கரைத்து சுமார் ஒருபடி பால் உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி இரண்டு மூன்றுமுறை செய்யவும். கைகண்ட முறை.

## மாட்டுக்கு கண்களில் பூவிழுந்தால்

பக்குவம்:- அரைபடி பசுவின்பாலில் ஆழாக்கு உப்புபோட்டு நன்றாய் சுண்டக்காய்ச்சி மைபோல் அரைத்து பத்துநாளைக்கு கண்ணில் போட்டுவர கரைந்துபோகும்.

## மூலத்தின் குணம்

உட்கார்ந்தாற்போல் சாணமிடும்.

பக்குவம்:- பேய்தும்மட்டி விரையும், கிளிஞ்சல் தசையும் அரைத்து கழுநீரில் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

## சீதை வெக்கையின் குணம்

மூக்கிலே தண்ணீர் விழும், வெடிக்கும், உடம்பு சுடும், மேயமாட்டாது.

பக்குவம்:- எள்ளு அரைநாழி, படி பசுவின்பாலில் போட்டு ஊரவைத்து கரைத்துக் கொடுக்கத் தீரும்.

## மாட்டுக்கு கழுத்து பிடிப்பு கண்டால்


பக்குவம்:- எருக்கன் பாலுடன் நல்லெண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் சேர்த்து பிடரிமுதல் முதுகுவரையில் தடவி இருபக்கமும் கழுத்தும் பிடரிநீங்க மற்ற இடங்களில் சூடுபோடவும் சொஸ்தமாகும்.

## அஜீரண நோயின் குணம்

தின்ற இறைபோலவே சாணம் போடும்,
அடிக்கடி காற்று பரியும்.

நிவர்த்தி:- கார்ப்பதற்கு மிளகுரெண்டு பலமேதூக்கு
கண்மணியே வெற்றிலையில் பலந்தானேந்து

சேர்த்திரண்டும் அரைத்துவெந் நீரில்தாக்கி
செலுத்தப்பா உள்ளுக்கு காலைவேளை
பார்த்திந்தப் படிமூன்று நாளுஞ்செய்து
பக்குவமாய் கழுத்திலே சூடும்போடு
தீர்க்கவே புண்ணியங்கள் மெத்தவுண்டு
யின்னமொரு நோயகலப் பாகங்கேளே.



(வசனம்) வெற்றிலை பலம்-5, மிளகு பலம்-2, ஒன்றாயரைத்து கால்படி வெந்நீரில் கலக்கி உள்ளுக்கு புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும் மேற்கண்டிருக்கும் சூட்டை கழுத்தைச்சுற்றி சுடவும்.

## கக்கல் நோயின் குணம்

தின்ற தீவனத்தை அப்பித் தள்ளும்,
அடிக்கடிக்கு உடம்பு மெலியும்.

நிவர்த்தி:- பாகங்கேள் வசம்புஒரு பலமுங்குப்பை
மேனியிலை நாலுபிடி கூடச்சேர்த்து
பாகங்கேள் இரண்டையுமே மைபோலாட்டி
பசும்பாலில் கலக்கியிதை உள்ளுக்கேத்து
வேகமாய் கொள்ளாட்டால் நிறுத்திடாதே
வெதுப்புமடா நோயினிட துன்பத்தாலே
போகாட்டால் என்னையுநீ நிந்திக்காதே
புகலுகிறே னின்னமொரு முறையுஞ்சுடும்.

(வ-ம்) குப்பைமேனியிலை நாலுபிடியும், வசம்பு ஒருபலமும் ஒன்றாய் அரைத்து பசும்பாலில் கலக்கி புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

வேறு முறை

(வ-ம்) சாதாரணமாய் காக்கையைப் பிடித்து கால் தலை குடல் ரோமம் எலும்பு நீக்கி, மற்றதை இடித்து, காடியில் கலக்கி புகட்டவும். இந்தப்படி 3-வேளை செய்யத்தீரும். இடது விலாவில் இதிற்கண்டபடி சுடவும்.




## சீதவெதுப்பு நோயின் குணம்

வாயில் எச்சை இடைவிடாமல் கற்றாழை சோறுபோல்
வடிந்துகொண்டே யிருக்கும், பின்னங்கால் நடுங்கும்.

நிவர்த்தி:- முருங்கையிலை சாறுபடி ஒன்றுதாக்கு
முன்னமே. காடிமூன்று படியில்தாக்கு
சரியாக ரெண்டுபலம் வெளிச்சிப்பட்டை
சாரித்து மெழுகுபோ லரைத்துக்கொண்டு

கருவாக முன்னுரைத்த வஸ்துவோடே
கலக்கியதை உள்ளுக்கு புகட்டிவிட்டு
அரிந்துகொள் இதிலிருக்கும் சூடுபோலே
அப்பனே யிடதுவிலா தன்னில்போடே.



(வ-ம்) முருக்கிலைச்சாறு 1-படியும், காடி 3-படியும் கலந்து, அதிலே வெளிச்சிப்பட்டை 2-பலம் அரைத்துப்போட்டு குடிப் பாட்டத் தீரும். இடது விலாவில் சூடுபோடவும்.

## போகந்தி நோயின் குணம்

வலிப்புதோன்றும், காலைத் தூக்கிகொண்டு நிற்கும், வாயில் நீர்வடியும், இளவலாய் சாணம்போடும், புல் தின்னாது.

நிவர்த்தி:- பொன்முசட்டை மூலமடா பலந்தான்பத்து
போட்டுரலில் ஒருஜாமம் இடித்தேயப்பால்
பின்னமிலா பசும்பாலை விட்டுநீதான்
பிழிந்துஅரைப் படிரசமே யெடுத்துக்கொண்டு
முன்னுரைத்த நோயுள்ள எருதுகட்கு
மூன்றுநாள் புகட்டிடவே தீருந்தீரும்
இன்னபடி சூடிதற்கு விபரமாக
இடதுவிலா தனிற்போட நோய்தானேது.




(வ-ம்) பொன்முசட்டை சமூலம் 10-பலம் கொண்டுவந்து உரலில்போட்டு யிடித்து, பசும்பால் விட்டுவிட்டு பிசைந்து, அரை படி ரசம் பிழிந்துக்கொண்டு உள்ளுக்கு புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் செய்யவும். சூட்டை இடது விலாவில் போடவும்.

## எலும்புருக்கி நோயின் குணம்

சிவந்த சாணம் போடும்.

நிவர்த்தி:- தும்பையிலை நாலுபிடி யுருவிவந்து
துகலாமல் மைபோலே அரைத்துக்கொண்டு
வம்பேது காடியென்ற கஞ்சிகாய்ச்சி
வளமாக அரைத்தவுண்டை போட்டுக்கிண்டி
தம்பிநீ யெருதுக்கு யிதுவேபாகம்
தக்கபடி மூன்றுநாள் புகட்டியப்பால்
கம்பிதனை காய்ச்சியிட விலாவுதன்னில்
கண்டபடிபிசகாமல்மாட்டிப்போடே.



(வ-ம்) தும்பையிலை 4-பிடி கொண்டு வந்து அரைத்து காடிக்கஞ்சியில் கலக்கிப் புகட்டவும், 3-நாள் செய்யவும். இந்தப்படி விலாவில் சூடவும்.

## நேதி நோயின் குணம்

வயிரிறையும், வாயில் நீர்வடியும், சாணம் நாறும்,
கண்களில் பீளை சாறும்.

நிவர்த்தி:- மலராத யெருக்கம்பூ பலந்தானைந்து
மைந்தனே நல்ல சீரகந்தான்பாதி
கலந்திரண்டும் ஒன்றாக அரைத்துக்கொண்டு
காடியிலே கலக்கியதை புகட்டிப்போடு
விலகுமடா மூன்றுநாள் மருந்தையிந்து
விபரமாய் சூடிடது விலாவிற்போட்டால்
தலமதனில் நோய்நீங்கி எருதுமீளும்
தருமமிதை விடவேறே வுலகிலுண்டோ.


ஞண

(வ-ம்) எருக்கம்பூ மலராத பக்குவமாயுள்ளது 5-பலம், நல்ல சீரகம் இரண்டரைபலம் ஒன்றாயரைத்து காடியிலேபோட்டு கலக்கிப்புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் தரவும். இடதுவிலாவில் சூடு போடவும்.

## வல்லாள நோயின் குணம்

நீர் சிவந்து இரத்தம்போல யிறங்கும்.


நிவர்த்தி:- தென்னம்பூ பாளையது ஒன்றுவாங்கி
தேரினதாய் நெல்லிக்காய் படியேதாக்கி
இன்னிரண்டும் நன்றாக யிடித்துக்காடி
தண்ணீரில் கலக்கியிதை காட்டவேணும்
இன்னபடி மூன்றுநாள் தவறாதீந்து
எழுதியே வைத்தபடி இந்தசூடு
மன்னவனே இடதுவிலா தன்னில்போடு
மாட்டுக்கு அபாயமில்லை மனம்நோகாதே.



(வ-ம்) நெல்லிக்காய் படி-1, தென்னம்பாளை-1, ஒன்றாய் இடித்து காடித்தண்ணீரில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும். இடது விலாவில் சூடவும்.

## சாணத்துடன் உதிரம்விழும் வியாதிக்கு மருந்து

நிவர்த்தி:- நிலக்குமிழி வேர்ப்பட்டை பலமிரண்டு
நெகிழவே அரைத்துபசுந் தயிரில்போட்டு
கலக்கியே குடிப்பாட்ட வேணுமப்பா
கைகண்ட முறையிதுவே மூன்றுநாளும்
நிலவரங்க ளில்லாமல் செய்துபாரு
நெஞ்சியிலும் கழுத்தினிலும் சூடவேணும்
பலவிதமாய் யேர்சிக்க வேண்டாமையா
பாரிலிதை விடவேறே முறைதானுண்டோ.




(வ-ம்) நிலக்குமிழிவேர் 2-பலம் கொண்டுவந்து நெகிழ அரைத்து பசுந்தயிரில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும் நெஞ்சியிலும் கழுத்திலும் சுடவும்.

## நீராழியின் குணம்

நீராயிரங்கும், நாளுக்குநாள் உடல் கரைந்து மெலிந்துவிடும், நன்ருய் தீவனந் தின்ஞது.

நிவர்த்தி:- அஞ்சிபலம் ஈருள்ளி யெடுத்துக்கொண்டு
ஈரஞ்சி பலஞ்சோற்றுக் கற்ருழைசேர்
கொஞ்சமடா மிளகுத்தூள் பலந்தானென்று
கூடவே திப்பிலித்தூள் பலந்தான்கூட்டு
துஞ்சவே அரைத்துஜலந் தனிற்கலக்கி
தூயவனே யிந்தபடி மூன்றுநாள்தான்
அஞ்சாமல் குடிப்பாட்டி மூன்ரும்நாளில்
அப்பனே இடதுவிலா தன்னில்சூடே.



(வ-ம்) மிளகுத்தூள் பலம்-1, திப்பிலித்தூள் பலம்-1, கற்ருழைச்சோறு பலம்-10, ஈருள்ளி பலம்-5 ஒன்ருய்ப்போட்டு அரைத்து வெந்நீரில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் செய்து இடது விலாவில் சுடவும்.

## கோரை வீக்கத்தின் குணம்

கன்னத்தில் வீங்கி
இரைதின்ஞது, குண்ணிக்கொண்டிருக்கும்.


நிவர்த்தி:- இந்தப்பிரகாரமே
வீக்கத்திற் சுடவும்.



இதுபோல் கழுத்தில் சுட வும். ஞ

## நெஞ்சில் பாரைபோல் வீங்கினல்

நிவர்த்தி:- நல்லெண்ணே கால்படிதான் அளந்தெடுத்து
நல்லமஞ்சள் கிழங்குதன்னை இடித்தசாறு
சொல்லுவதேன் கால்படிசார் பிழிந்துக்கொண்டு
சோதித்த மிளகுபலம் ஒன்றுதூக்கி
கல்வத்தில் அரைததுமுன் மருந்தில்தூவி
காய்ச்சியே உள்ளுக்குப் புகட்டுவாய்நீ
நல்லமுறை யிதுபோலே மூன்றுநாளும்
நடத்தியபின் வீக்கத்தில் சூடுபோடே.



(வ-ம்) கூரல்யெண்ணை கால்படியில் பச்சைமஞ்சள்கிழங்கை இடித்த சாறு கால்படி பிழிந்து ஒருபலம் மிளகுத்தூள்போட்டு கலக்கி கொடுக்கவும் இந்தமுறை மூன்றுநாள் செய்யவும். வீக்கத் தின்மேலே சூடுபோடவும்.

## குடல்முறுக்கு நோயின் குணம்

கிடந்த யிடத்திலே கிடக்கும், காலை செருக்கும், சாணமிடும்.

நிவர்த்தி:- நாய்ப்பா லிலைச்சாறு படிதானென்று
நல்லபசும் பாலதிலே படிதானூற்றி
தோய்ந்தவெண்ணை யுருக்குநெய் படியரிக்கால்
தொந்தித்து கலக்கியிதை உள்ளுக்கேத்து
பேய்த்தனமா யிருக்காதே மைத்தாநாளில்
பலமிரண்டு அகில்பட்டை காடிதன்னில்
தோய்த்துநன்று யூரவைத்து அரைத்துவூட்டு
தொடுத்திடுவாய் சூடிதற்கு நெஞ்சில்போடே.




(வ-ம்) நாய்ப்பாலிலைச்சாறு படி-1, பசுவின்பால் படி-1, பசும் நெய் படி அரிக்கால் ஒன்றுச்சேர்த்து புகட்டி, அகில்பட்டையை யிடித்து காடியில் ஊரவைத்து புகட்டவும். நெஞ்சியில் சுடவும்.

## ஈரல்முட்டி நோயின் குணம்

தீவனந் தின்னாது, பல்லை நெறநெறவென்று கடிக்கும், வயிறாதும், கண்களில் பீளைசாறும், இரத்தம்போல் நீர்வடியும், புழுக்கைபோல் சாணம்போடும்.

நிவர்த்தி:- பிரண்டைதண்டு பிடியொன்று பரித்துக்கொண்டு
பேசியதோர் மதுக்காரை வேரின்பட்டை
இரண்டையுமே இரண்டுபிடி ஒன்றாய்ச்சேர்த்து
யிடித்துநன்றாய் மயனம்போ லறைத்துக்கொண்டு
திரமான காடியிலே கலக்கியப்பா
தேக்கிடுவாய் எருதுக்கு மூன்றுநாளும்
இருபுரமும் கழுத்துமுதல் வால்வரைக்கும்
இதுபோலே சூடிதற்கு யிழுத்துபோடே.



(வ-ம்) பிரண்டைத்தண்டு பிடி-1, மதுக்காரைவேர் பட்டை பிடி-1, இவைகளை மயனம்போல் அரைத்து காடியில் கலக்கி புகட்டத் தீரும். மேற்படி சூட்டை கழுத்திலிருந்து வால் வரையிலும் இழுத்துச் சுடவும்.

## வெங்கொடி நோயின் குணம்

உடல் நடுக்கும், மூக்கில் இரத்தம் விழும், குண்ணிக் கொண்டு நிற்கும், இரைதின்னாது.

நிவர்த்தி:- மதுக்கரைவேர்ப் பட்டையொடு வெள்ளைப்பூண்டு
மைந்தனே வகைக்குபலம் மூன்றுவாங்கு
பதறாதே எருதுக்கு வியாதியென்று
பலமொன்று வசம்புஅதன் கூடச்சேர்த்து
பதமாக அரைத்துவெந் நீரில்தாக்கி
பக்குவமா யிந்தமுறை மூன்றுநாள்தான்
இதிலுரைத்த படிசூடு குறிப்புகண்டு
இடதுவிலா தனிற்போட்டால் ஏதுநோயே.

(வ-ம்) மதுக்காரைவேர் பலம்-3, வெள்ளைப்பூண்டு பலம்-3, வசம்பு பலம்-1, இவைகளை யரைத்து இளவெந்நீரில் கலந்து புகட்டவும். பிறகு சுக்கு ஒருபலம் எடுத்து சிறுநீர்விட்டு இடித்து உலர்த்தி சல்லாக்கந்தையில் முடிந்து நாசியில் நசியமிடவும்.

## ஊதடைப்பன் நோயின் குணம்


வயறாதும், கண்சிவக்கும், வாயில் நீர்வடியும், இரைதின்னாது.

நிவர்த்தி:- மிளகிதற்கு ரெண்டுபலம் வேணும்வேணும்
மதுக்கரைவேர்ப் பட்டைபலம் ஐந்துவேணும்
அளவிதற்கு வெள்ளுள்ளி பலமிரண்டு
ஆகுமடா ஒன்றாக அரைக்கவேணும்
தளரமனம் வேண்டாம்நீ காடியென்ற
தண்ணீரில் கரைத்தப்பா உள்ளுக்கேத்து
அளவாக இந்தமுறை மூன்றுநாளும் 0
ஆனபின்னே இடதுவிலா தன்னிற்சூடே. 00

(வ-ம்) மிளகு பலம்-2, மதுக்கரைவேர்ப்பட்டை பலம்-5, வெள்ளுள்ளி பலம்-2, ஒன்றாக அரைத்து காடிநீரில் கரைத்து புகட்டவும். இந்தப்படி 3-நாள்செய்யவும். இடதுவிலாவில்சுடவும்.

## நன்வாரி நோயின் குணம்

நிவர்த்தி:- நல்வாரி நோய்தனக்கு பக்குவந்தான்
நங்கையரே ஓரிலைத்தா மரைசமூலம்
வில்நேர்ந்த புருவமுள்ள விழியணங்கே
விஷ்ணுவிட காந்திசெடி இவையிரண்டும்
சொல்வதே னிருவகையுஞ் சமமாய்க்கொண்டு
சுரபியிட மோர்விட்டு யிடித்துநன்றாய்
புல்லவே ஒருபடிசார் பிழிந்துகொண்டு
புகட்டுவாயிந்தமுறை மூன்றுநாளே.



(வ-ம்) விஷ்ணுகிரந்திசமூலம், ஓரிலைத்தாமரைசமூலம், சமமாய்க் கொண்டுவந்து உரலில்போட்டு பசுவின் மோர்விட்டு யிடித்து ஒருபடி சார் பிழிந்துக்கொண்டு உள்ளுக்குப் புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் செய்யவும். இதற்கு சொல்லிய சூட்டை இடது விலாவில் சூடத்தீரும்.

## பரங்கி நோயின் குணம்


தேகமெங்கும் கொப்பளம்போல் வெடித்து, மீன் சிலம்பு போல் அசரும், ரோமமும் உதிரும்.

நிவர்த்தி:- அத்திகனிப் பிஞ்சியிலே பலமிரண்டு
அதிமதுரம் கூடவே பலமிரண்டு
பத்தினியே ஈருள்ளி பலமிரண்டு
பாங்கான லவங்கபட்டை பலமிரண்டு
இத்தனையும் இடித்துநன்றா யரைத்துக்கொண்டு
ஏந்திழையே கழுநீரில் கலக்கிக்காட்டி
மெத்தயில்லை மூன்றேநாள் இந்தபாகம்
மெல்லியரே தீராட்டால் வேறேகேளே.

(வ-ம்) அத்திப்பிஞ்சு, அதிமதுரம், ஈருள்ளி, இலவங்கப் பட்டை, இதுகளை வகைக்கு பலம் 2-வீதமாய் நிறுத்து ஒன்றாய்ப் போட்டு யிடித்து நன்றாயரைத்து கழுநீரில் கலக்கி புகட்டவும். மூன்றுநாள் செய்து பார்க்கவேணும். தீராவிட்டால் வேறே பாகமும் சூடும் இதனடியிற் காணவும்.

### வேறு முறை

நிவர்த்தி:- வேப்பிலையை உருவிவந்து உரலில்போட்டு
விதமாகக் காடிவிட்டு இடித்திடித்து
காப்பிட்ட கரத்தாளே ஒருபடிசார்
கணக்காக வேபிழிந்து யெடுத்துக்கொண்டு
தோப்பிலுள்ள ஈரவெங் காயந்தன்னை
துகளவே ரெண்டுபலம் அரைத்துப்போட்டு
சாப்பிடவே எருதுக்கு இந்தபாகம்
சடங்காமல் மூன்றுநாள் செய்துபாரே.



(வ-ம்) வேப்பிலையை உரலில்போட்டு காடிவிட்டு யிடித்து யிடித்து ஒருபடி சாறு பிழிந்துகொண்டு அதிலே ஈர்வெங்காயம் இரண்டுபலம் அரைத்துப்போட்டு கலக்கி உள்ளுக்கு புகட்டவும். இந்தப்பிரகாரம் மூன்றுநாள் செய்யத்தீரும். இடதுவிலாவில் இது போல் சூடுபோடவும்.

101493

## நாறு நோயின் குணம்

குண்ணிக்கொண்டு நிற்கும், செவி தாழும்.

நிவர்த்தி:- முலைப்பால்தான் படியரிக்கால் கரந்துக்கொண்டு
முற்றினதோர் தேங்காய்ப்பால் படி தானென்று
கலைவிழியின் நேராளே நல்லயெண்ணெய்
கால்படியே போதுமிவை சொல்லக்கேளு
கலக்கிடுவாய் முப்பொருளும் ஒன்றாயூற்றி
கண்மணியே யிதுபோலே மூன்றுநாள்செய்
நிலைக்குமோ வந்தநோய் குடியேபோச்சு
நீயதற்கு இருபுறமும் சூட்டைபோடே.




(வ-ம்) தேங்காய்பால் ஒரு படி, நல்லெண்ணெய் கால் படி, முலைப்பால் அரிக்கால்படி ஒன்றாயூற்றி நன்றாய்க்கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் செய்யத் தீரும். இரண்டு பக்கம் விலாவிலும் சூடுபோடவும்.

## தவளை நோயின் குணம்

பிள்ளைகள் தவிழ்தல்போலத் தவிழும் நாலுகாலும்.

நிவர்த்தி:- குப்பையிட மேனியிலை சழலாவாரை
கொண்டுவா வகைக்குபலம் பத்துவீதம்
அப்படியே உரலிலிட்டு யிடித்துக்கொண்டு
ஆரணங்கே காடியிலே கலக்கினாலும்
கைப்பிடியாய்ப் பிழிந்துசார் யெடுத்தானாலும்
கல்வத்தில் மைபோல அரைத்தானாலும்
எப்படியென் றாலுமதை உள்ளுக்கேத்து
இந்தபடி மூன்றுநாள் செய்துபாரே.



(வ-ம்) குப்பைமேனியிலை பலம்-10, சழலாவாரையிலை பலம்-10, இவைகளை நன்றாயிடித்து காடிநீரில் கலக்கியாவது, இடித்து சாறுபிழிந்தாவது, அல்லது காடிவிட்டரைத்து உருண்டைசெய்து உள்ளுக்குக் கொடுக்கவும். இந்தப்பிரகாரம் மூன்றுநாள் செய்ய தீரும். இந்தப்படி வலது விலாவில் சூடுபோடவும்.


### வேறு முறை

(வ-ம்) தைவேளை பலம்-10, குப்பைமேனியிலை பலம்-10, தும்பையிலை பலம்-10, மிளகு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1, இவைகளை ஒன்றாயரைத்து உருண்டைசெய்து உள்ளுக்கேத்த மேற்படி தவளைநோய் தீரும்.

## மேதாவி நோயின் குணம்

நெஞ்சடைத்து தொண்டைகட்டி செறுமும்.

நிவர்த்தி:- அன்னமே மிளகுத்தூள் பலமேஒன்று
அதுபோலே திப்பிலித்தூள் பலந்தானென்று
சொர்னமே பசுவின்நெய் தனிற்குழப்பி
சோதிப்பாய் எருதுக்குகொடுத்துநீதான்
இன்னமேன் இந்தமுறை மூன்றேநாளதான்
ஈந்துப்பார் நோயென்ற வார்த்தையேது
அன்னமே இதிற்குறித்த சூடுதன்னை
அடிவயிற்றிற் போடென்று அறிந்துகொள்ளே.



(வ-ம்) மிளகு ஒருபலம், திப்பிலி ஒருபலமும் மயனம்போல் அரைத்து பசுவின்நெய்யில் குழப்பி கொடுக்கத்திரும். இந்தப்படி மூன்றுநாள் செய்யவும். இதில் கண்டிருக்கும் சூட்டைப்போல் கீழ்வயறு என்கிற அடிவயற்றில் சுடவும்.

## கதவடைப்பன் நோயின் குணம்

கொப்பைச்சுற்றி வீங்கும், வாய்திறவாது, கண்சிவக்கும்.

நிவர்த்தி:- இந்துப்பு பலங்காலு சொல்லக்கேளு
ஏந்திழையே பெருங்காயம் பலமேகாலு
சந்தமாய் நீர்விட்டு மைபோலாட்டி
சாரிப்பாய் பசும்பால்தா னுழக்கேபோதும்
இந்தபடி கலக்கியதை யீந்துபோடு
யிதுபோலே மூன்றுநாள் செய்தேபாரு
வந்தநோய் சொல்லாம லோடும்பாரு
வாவென்று அழைத்தாலும் இடந்தானேது.



(வ-ம்) இந்துப்பு கால்பலம், பெருங்காயம் கால்பலம் ஒன்று யரைத்து கால்படி பசும்பாலில் கலக்கிப் புகட்டவும். இதுபோல மூன்றுநாளைக்கு கொடுக்கத் தீரும்.

இடதுபக்கம் மேல்கொண்டைமுதல் வலதுகால் வரையிலும் இந்த சூட்டை யிழுத்து போடவும். அல்லது இந்தப் படிக்கே இருவிலாசிலும் சுடவும்.




கொம்பைச் சுற்றிலும் வீங்கி யிருக்குமென்று முன் கூறியதற்கு கொம்புக்குமேல் உள்ள வீக் கத்தைச் சுற்றி இந்தப்படி சுடவும்.



## தலைப்புதுநோயின் குணம்

காலை வெட்டிக்கொண்டு நிற்கும், மனிதரைப் பாயும்,
உடல் மெலியும், பொய்மேய்ச்சலாய் மேயும்.

நிவர்த்தி:- விளக்கெண்ணை கறியுப்பு வெள்ளைப்பூண்டு
வசம்புடனே அத்தியுட வேரின்பட்டை
அளவாக நாயுருவி யிலையோடாறு
அளவெல்லாம் சொல்லுகிறேன் யிடிக்கவேணும்
களங்கமா யரைத்துமுதல் எண்ணை தன்னில்
கலக்கியே புகட்டிவிட வியாதிபோச்சு
துலக்கமா யிடதுவிலா பக்கந்தானே
துஞ்சாமல் இதைப்போலே சூடும்போடே.



(வ-ம்) விளக்கெண்ணெய் படி-1, உப்பு, வெள்ளைப்பூண்டு, வசம்பு, அத்திவேர்ப்பட்டை, நாயுருவியிலை வகைக்கு ஒருபலம் வீதமாக எடுத்து இடித்து நன்றாயரைத்து மேற்படி எண்ணையில் கலக்கி புகட்டத்தீரும். இந்தப்படி இடது விலாவில் சுடவும்

## அங்கி நோயின் குணம்

இருவிழியும் இரத்தம்போல சிவக்கும்.

நிவர்த்தி:- துளசியிலை ஐந்துபலம் நிறுத்தெடுத்து
துகளவே அரைத்தாவின் மோரில்போட்டு
கலக்கியே புகட்டிவிடு வியாதிபோகும்
கண்மணியே யிந்தமுறை மூன்றுநாள்செய்
துலக்கமாய் இடதுவிலா பக்கமாக
தோற்றுகின்ற படிசூடு போட்டுவிட்டால்
நிலைக்குமோ வந்தநோய் குடியேபோச்சு
நேரிழையே யிந்தமுறை கைவிடாதே.




(வ-ம்) துளசியிலை ஐந்துபலம் நிறுத்தி அரைத்து பசுவின் மோரில் கலக்கிப் புகட்டவும். இந்தப்படி மூன்றுநாள் செய்யத் தீரும். இடது விலாவில் சுடவும்.

## தாளுந்து நோயின் குணம்

அருவருப்பாய் மேயும், மனங்கொண்டு
இரைதின்னாது, அடிக்கடி தண்ணீர் குடிக்கும்,
மனிதரைக்கண்டால் பாயும்.

நிவர்த்தி:- முத்தினதோர் ஆவாரை யிலையானாலும்
மொய்குழலே பட்டையது அகப்பட்டாலும்




துவைத்துநன்றாய் படியரிக்கால் சார்பிழிந்து
தோகையரேநல்லெண்ணை சமனுய்ச்சேர்த்து
சித்தமது கலங்காதே யிந்துபாரு
சிதருமதுநோய்களெலாம் பனியைபோல
மெத்தனவே யிந்தமுறை மூன்றுநாள்தான்
மெல்லியரே யிடதுவிலா தன்னில்போடே.

(வ-ம்) முத்தின ஆவாரையிலையாவது பட்டையாவது யிடித்தெடுத்து அரிக்கால்படி சாறுபிழிந்து அதுபோலவே நல்லெண்ணெய் சேர்த்து கலந்து புகட்டத் தீரும். மூன்றுநாளைக்கு இந்த முறை செய்து பின் இடது விலாவில் சுடவும்.

## செங்கநோயின் குணம்

தலைக்குத்திட்டு நிற்கும், இரைதின்னாது.

நிவர்த்தி:- கற்பூர வல்லிச்சார் படிதானென்று
கலக்கவே நல்லெண்ணை படி தான்காறு
சொற்பூத்த வொயிலாளே இரண்டுமொன்றாய்
தொந்தித்து புகட்டிவிட நோயங்கேது
விற்பூத்த விழியாளே யிந்தபாகம்
விதமாக மூன்றுநாள் செய்தபின்பு
கற்பூத்த படியிடது விலாவைப்பார்த்து
காய்ச்சியே மாட்டிவிடு சூட்டைத்தானே.




(வ-ம்) கற்பூரவல்லி சமூலம் கொண்டுவந்து இடித்து படி சாறு பிழிந்து அத்துடன்கூட கால்படி நல்லெண்ணெய் கலந்து புகட்டத்தீரும். இதுவேமுறை மூன்றுநாள் செய்யவும். இந்தப்படி இடது விலாவில் சுடவும்.

## மூக்கடைப்பன் நோயின் குணம்

மூக்கடைத்துக்கொண்டு
குருகுரு வெனச் செறுமும், ஊதும்.


நிவர்த்தி:- தைவேளை யிலையோடு கறியுப்பாகும்
தையலரே குப்பையிட மேனியாகும்
மைவிழியே கண்டங்கத் திரிப்பழந்தான்
கணக்கில்லை சமபாகம் வசம்புஞ்சேறு
ஐவகையும் சமமாக நிறுத்துக்கொண்டு
ஆரணங்கே சிறுநீர்விட் டிடித்துக்கொள்ளு
பையவே சீலையிலே மூடிந்துகொண்டு
பக்குவமாய் நாசியிலே பிழிந்துபோடே.



(வ-ம்) கண்டங்கத்திரிபழம், கறியுப்பு, தைவேளையிலை, வசம்பு குப்பைமேனியிலை இவைகளை சரியிடையாயெடுத்து சிறுநீர்விட்டு யிடித்து சீலையில்முடிந்து மூக்கில் பிழியத்தீரும். சுரண்டிரசம் பிழியலாம் இந்தப்படி இருவிலாவிலும் சுடவும்

## இந்துநோயின் குணம்


நான்கு காலும் தளர்ச்சியா யிருக்கும்.



நிவர்த்தி:- இதில் கண்டிருக்கிற சூலம்போல் நான்கு காலிலும் முழங்கால்களிலும் நெஞ்சியிலும் சுடவும்.

## வேறு வியாதிக்குரியது

கண்களிலும் வாயிலும் நீர்வடியும், சாணமாய் பீசும், கழியும் நாற்றமடிக்கும்.




நிவர்த்தி:- இண்டமென்ற செடியினிட கொழுந்துவாங்கு
ஏந்திழையே விளாயிலையும் வகைதான்ரெண்டு
கொண்டுவா மும்மூன்று பிடியிரண்டும்
கொட்டிவிடு மூன்றுபடி தண்ணீர்க்குள்ளே
செண்டாடும் படிபோலே கலக்கிப்போடு
செலுத்திவிடு உள்ளுக்கு யிதுவேபாகம்
கண்டபடி உழலாதே மூன்றுநாளும்
கருத்தாக யிந்தமுறை தந்துபாரே.

(வ-ம்) விளாயிலை மூன்றுபிடியும், இண்டங்கொழுந்து மூன்றுபிடியும் கொண்டுவந்து அரைத்து மூன்றுபடி தண்ணீரில் கலக்கி புகட்டத் தீரும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும். இடதுவிலாவில் சூடுபோடவும்.

## கொக்கை நோயின் குணம்

வயிறாதும், அறுவருப்பாய் மேயும், செவிதாழும்.



நிவர்த்தி:- ஏலமொடு மிளகுகருஞ் சீரகந்தான்
ஏந்திழையே நல்ல சீரகமுஞ்சுக்கு
சாலவே யிவையெல்லாம் வகைவகைக்கு
சரியாக பலமொன்ருய் நிறுத்திவந்து
கோலமா யரைத்ததனை வழித்துக்கொண்டு
கொடுத்திடுவாய் சிறுநீரில் கலக்கியேதான்
நாலிடமாம் செவிநாசி கண்களுக்கும்
நாயகமே மும்மூன்று துளிதான்தாக்கே.


(வ-ம்) கருஞ்சீரகம் நற்சீரகம் சுக்கு மிளகு ஏலம் வகைக்கு ஒருபலம்வீதம் கொண்டுவந்து யிடித்து அரைத்து சிறுநீர்விட்டு கலக்கி புகட்டவும். உடனே கண் செவி நாசி இதுகளில் மும்மூன்று துளி விடவும். இந்தப்படி மூன்றுநாள் செய்யத் தீரும். இதுபிரகாரம் இருவிலாவிலும் ஈரலைப்பற்றியும் சுடவும்.

01493

## வாய்கிரந்தி நோயின் குணம்

வாய் வீங்கும், வாயில் நீர்வடியும்.


நிவர்த்தி:- கருணைக்கிழங்கு அல்லது காட்டுக்கருணைக் கிழங்கு 5-பலம்கொண்டுவந்து அரைத்து மோரில் கலக்கி புகட்டவும். இந்தப்படி காலில் சுடவும்.



## உதிரிநோயின் குணம்

மயிரைச் சிலிர்த்துக்கொள்ளும், அடிக்கடி கழியும், தண்ணீராயுங் கழியும்.

நிவர்த்தி:- விடத்தைக்கொழுந்து 10-பலம், ஈருள்ளி 10-பலம் இவைகளை அரைத்து எருமை மோரில் கலக்கி கொடுக்கத்தீரும். இடதுவிலாவில்சுடவும்.



## தவளை மூக்கடைப்பன் குணம்


மூக்கடைத்து நெடுமூச்செரியும், தடுமாறும்.

நிவர்த்தி:- மிளகு, திப்பிலி, சிந்திலிலை, இதுகளை சமமாயெடுத்து அரைத்து சிறுநீர்விட்டு கலந்து நாசியில் பிழியத் தீரும்.

இந்தப்படி மூக்கில் சுடவும்.



இந்தப்படி தலைசுற்றிச் சுடவும்.



## அம்மணிச் சிலந்தியின் குணம்

முன்னர் கால்முதல் தொப்புள்வரையும் வீங்கும்.

நிவர்த்தி:- தலைச்சுருளிவேர் பலம்-3, வள்ளிவேர்ப்பட்டை பலம்-3, ஒன்றாயரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டத் தீரும். மேற்படி 2-வேரையும் அரைத்து வீக்கத்தில் தடவிவரத் தீரும். இந்தப்படி கெஞ்சியில் சுடவும்.



2413
10-94

## நாரைக்கால் நோயின் குணம்

வயறு வீங்கும், வாயில் நீர்வடியும், மயிர் சிலிர்க்கும், கால் வளையும், கூனி நிற்கும், நிமிராது.

நிவர்த்தி:- தரைப்பழுப்பு ஈருள்ளி சமமாயிடித்து அரைபடி சாறு பிழிந்து கட்டவும்: 3-நாள் செய்யத் தீரும்.

இந்தப்படி இடதுவிலாவில் சூடு போடவும்.

ஓம்ஸ்ரீ

மாட்டு வைத்தியம் முற்றிற்று.

---

பதிப்பிடம்: அ. குழந்தைவேல்முதலியார், தெய்வமகள் விலாசம் பிரஸ்
24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சௌகார்பெட், சென்னை. 1951

## தெய்வமகள் பதிப்பின்

# வைத்திய புத்தகங்கள்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| **பெருமுறை பாக்கெட் வைத்தியம** | | | |
| கலிகோ பயிண்டு விலை ரூபா | 2 | 0 | 0 |
| **அனுபவ குடும்ப வைத்தியம்** | | | |
| இதன் விலை அணு | 0 | 4 | 0 |
| **வைத்திய அரிச்சுவடி** | | | |
| 4-பாகங்கள் ஒரே பயிண்டு | 1 | 8 | 0 |
| ஷை 4-பாகங்கள கலிகோ பயிண்டு | 2 | 0 | 0 |
| **மாட்டுவாகடம்** | | | |
| தனி பயிண்டு விலை ரூபா | 3 | 0 | 0 |
| தனி கலிகோ பயிண்டு விலை ரூபா | 3 | 8 | 0 |
| **அசுவசாஸ்திரம்** | | | |
| தனி பயிண்டு விலை ரூபா | 3 | 0 | 0 |
| தனி கலிகோ பயிண்டு விலை ரூபா | 3 | 8 | 0 |
| **மாட்டுவாகடம்-அசுவசாஸ்திரம்** | | | |
| 2-ம் சேர்ந்த கலிகோ கட்டடம் | 5 | 0 | 0 |
| **மாட்டு வைத்தியம்** | | | |
| இதன் விலை அணு | 0 | 4 | 0 |
| **பச்சிலை வர்க்க பசுமூலிகை அகராதி** | | | |
| 112-பக்கங்களடங்கியது விலை ரூபா | 1 | 4 | 0 |
| ஷை கலிகோ பயிண்டு விலை ரூபா | 1 | 8 | 0 |

பதிப்பாளர்:

**அ. குழந்தைவேல் முதலியார்**

**தெய்வமகள் விலாசம் பிரஸ்**

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.